செய்தி வெளியீடு எண்:90 /2021 நாள் : 01.04.2021

**காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் இ.ஆ.ப., அவர்கள் மாற்றுத்திறனாளிகளுடன் வாக்காளர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டு, தேர்தல் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை துவக்கி வைத்தார்.**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பொதுமக்கள் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாவட்ட அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியோர் பொதுமக்கள் கூடும் பல்வேறு இடங்களான பேருந்து நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், சந்தைகள், பள்ளிகள், கல்லூரிகள், தனியார் தொழிற்சாலைகள், நகராட்சி, பெருநகராட்சி பகுதிகள் மற்றும் பல்வேறு கிராமங்களில் உள்ள ஊரக பகுதிகள் போன்ற பல்வேறு இடங்களில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். மேலும் மாதிரி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்காளர்கள் தங்களது வாக்குகளை எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்று (01.04.2021) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக மாற்றுத்திறனாளிகள் வருகின்ற சட்டமன்ற தேர்தல் நாளான 06.04.2021 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் மாற்றுத்திறனாளிகள் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தும் வகையில் சவிதா கல்லூரியில் பயிலும் தொழில்முறை சிகிச்சை நிபுணர்களின் தேர்தல் விழிப்புணர்வு நடன நிகழ்ச்சியை (Flash Mob) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகளுடன் வாக்காளர் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடி மையத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாக்குகளை எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாபு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**